Registered as Newspaper

THE SUDAR OLI

# சுடர் ஒளி

23.04.2020 வியாழக்கிழமை



# தப்பிவந்த 8 பேரையும் தனிமைப்படுத்துக!

## நீதிமன்றம் உத்தரவு

யாழ்ப்பாணம், ஏப். 23

கொழும்பில் கொரோனா வைரஸ் பரவல் அபாயப் பகுதியில் தனிமைப்படுத்தப்பட்ட நிலையில் லொறியில் யாழ்ப்பாணத்துக்கு தப்பிவந்த 8 பேரையும் அவர்களை சட்டத்துக்கு புறம்பாக ஏற்றிவந்த பாரவூர்திச் சாரதி மற்றும் உதவியாளர்களைத் தனிமைப் படுத்தல் நிலையத்தில் வைத்து கண்காணிக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பக்.2

## நாடாளுமன்றை கூட்டுவதா? முடிவு நீதித்துறையிடம்!

*சபாநாயகர் கரு அதிரடி அறிவிப்பு*

கொழும்பு, ஏப். 23

"பொதுத்தேர்தல் ஜூன் 20ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில், கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை ஜூன் 2ஆம் திகதிக்கு முன்னர் மீளக் கூட்டுவதா? இல்லையா? என்பதை நீதித் துறைதான்

பக்.2

## தேர்தல் திகதியை மாற்ற முடியாது

*மஹிந்த தேசப்பிரியவின் அறிவிப்புக்கு ஹூல் எதிர்ப்பு*

யாழ்ப்பாணம், ஏப். 23

ஜூன் 20ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தல் இடம்பெறும் என்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது. இந்த முடிவை தேர்தல்கள்

பக்.8



## காப்புறுதிகாரரை தெறித்தோட வைத்த கொரோனா

*நல்லூரில் இப்படிச் சம்பவம்*

யாழ்ப்பாணம், ஏப். 23

காப்புறுதி நிறுவனத்திடமிருந்து தப்புவதற்காக கொரோனாவைப் பயன்படுத்திய பெண்ணால் நல்லூர்ப் பகுதியில் இன்று காலை பரபரப்பு நிலவியது. நல்லூர்ப் பகுதியில் வசிக்கும் ஒருவர் காப்பு

பக்.2

## நாடாளுமன்றம் மீள இயங்க வாய்ப்புண்டு

*வடக்கு மாகாண அவை தலைவர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஏப். 23

பொதுமக்கள் பாதுகாப்பு சட்டம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டால், கலைக்கப்பட்ட நாடாளுமன்றம் தானாகவே மீள இயங்குவதற்கான வாய்ப்புகள் உள்ளது

பக்.2

## இன்றும் 5 பேருக்கு கொரோனா தொற்று

- இதுவரை 335 பேர்
- குணமடைவு 105 பேர்
- சிகிச்சையில் 223 பேர்

கொழும்பு, ஏப். 23

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகிய மேலும் 5 பேர் இன்று அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதற்கமைய தொற்றுக்குள்ளாகியவர்களின் மொத்த எண்ணிக்கை

பக்.2

## ஆனையிறவு, பூநகரியில் தீவிர சோதனை

*ஒத்துழைக்குமாறு கோரிக்கை*

யாழ்ப்பாணம், ஏப். 23

யாழ்ப்பாணத்துக்கு பொருள்களை ஏற்றி வரும் வாகனங்கள் ஆனையிறவு மற்றும் பூநகரியில் சோதனைக்கு உட்படுத்தப்படும். இந்தச் சோதனை நடவடிக் கைகளுக்கு வர்த்தகர்கள் ஒத்து

பக்.2

## அனுமதியற்று ஊடுருவிய 8 பேரும் வர்த்தகர்களின் லொறியில் யாழ்ப்பாணம் வரவில்லை!

யாழ்ப்பாணம், ஏப். 23

கொழும்பு தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்கு தப்பி வந்த 8 பேரும், யாழ்ப்பாண வர்த்தகர்களின் லொறியில் வரவில்லை என்றும், வாடகைக்கு அமர்த்தப்பட்ட லொறியிலேயே அவர்கள் வந்துள்ளதாகவும் யாழ்ப்பாண வர்த்தக சங்க உபதலைவர் இ.ஜெயசேகரன் தெரிவித்தார்.

பக்.2

## பந்து இப்போது கோத்தாவின் கையில்

*கூறுகிறார் ஹூல்*

யாழ்ப்பாணம், ஏப். 23

நாடாளுமன்றத் தேர்தல் திகதியை ஆணைக் குழு அறிவித்து விட்டது. இதன் காரணமாக எழும் அரசமைப்பு நெருக்கடிகளைத் தீர்க்க வேண்டிய பொறுப்பு நிறைவேற்று அதிகாரத்தின், ஜனாதிபதி கோத்தா

பக்.2

## கொழும்பால் கொண்டுவரப்பட்டோர் தொடர்பில் பதற்றம் வேண்டாம்

*மருத்துவமனைப் பணிப்பாளர் சத்தியமூர்த்தி தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஏப். 23

கொழும்பிலிருந்து இப்போது யாழ்ப்பாணம் கொண்டு வரப்பட்டவர்கள் தொடர்பாக பொதுமக்கள் அதிகளவில் பதற்றம் அடையத் தேவையில்லை. இருப்பினும் மிக அவதான

பக்.8

## நிவாரண நடவடிக்கைகளில் வேட்பாளர்களுடன் இணைந்து அரச அதிகாரிகள் செயலாற்ற தடை!

*தேர்தல்கள் ஆணைக்குழு திடீர் அறிவிப்பு*

கொழும்பு, ஏப். 23

அரச நிவாரணங்கள் வழங்கும் நடவடிக்கைகளில் நாடாளுமன்ற வேட்பாளர்கள் எவருடனும் இணைந்து செயற்பட வேண்டாம் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல்

பக்.2

சுட்டெரிக்கும் உண்மைகளை சுமந்து வரும் மாலை இதழ்

# தப்பிவந்த 8 பேரையும்....

யாழ்ப்பாணம் பொலிஸார் தாக்கல் செய்த விண்ணப்பத்துக்கு யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.பீற்றர் போல் உத்தரவிட்டார்.
நாட்டில் கொரோனா அச்சுறுத்தல் அதிகமாகக் காணப்படும் கொழும்பு 12 பகுதியிலிருந்து 8 பேர் லொறியில் சுகாதார அமைச்சின் அறிவுறுத்தல்களை மீறி யாழ்ப்பாணத்துக்கு தப்பி வந்தனர். அவர்கள் 8 பேரும் அடையாளம் காணப்பட்டதுடன், அவர்களை ஏற்றி வந்த சாரதி மற்றும் உதவியாளரும் கண்டறியப்பட்டனர்.
குருநகர், பீச் வீதியைச் சேர்ந்த ஒருவர், யாழ்ப்பாணம் ஐந்துசந்தி ஒஸ்மானியா வீதியைச் சேர்ந்த ஒருவர், சங்கானை ஓடக்கரையைச் சேர்ந்த ஒருவர், சுழிபுரம் தொல்புரத்தைச் சேர்ந்த ஒருவர், தெல்லிப்பழை (சந்திக்கு அருகில்) ஒருவர், நாவற்குழி வீட்டுத்திட்டம் பகுதியைச் சேர்ந்த மூவர் மற்றும் நீர்வேலியைச் சேர்ந்த சாரதி, உரும்பிராயைச் சேர்ந்த உதவியாளர் ஆகிய பத்துப் பேரே இவ்வாறு தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இவர்களை மே மாதம் 26ஆம் திகதிவரை தனிமைப்படுத்தல் நிலையத்தில் வைத்து கண்காணிக்க உத்தரவிட்டார்.
இதேவேளை, தப்பி வந்த 8 பேரும், சாரதிக்கு தலா 2 ஆயிரத்து 500 ரூபா பணம் வழங்கியுள்ளனர். மேலும், இவர்களில் ஒரு சிலர் தாம் நடந்து வந்ததாக முதற் கட்ட விசாரணைகளில் தெரிவித்த போதும் அது பொய்யான தகவல் என்பது மேலதிக விசாரணைகளில் தெரியவந்துள்ளது. கொழும்பு டாம் வீதியிலிருந்து புகையிரத தண்டவாளத்தில் நடந்து சென்று மருதானையிலேயே இவர்கள் லொறியில் ஏறியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
இதேவேளை இவர்களை பலாலி தனிமைப்படுத்தல் மையத்திலா? அல்லது விடத்தற்பளை தனிமைப்படுத்தல் மையத்திலா? தடுத்து வைப்பது என்பது தொடர்பில் இன்னமும் தீர்மானம் எடுக்கப்படவில்லை என்று அறியமுடிகின்றது. இவர்களது குடும்பத்தினர் அனைவரும் தற்போது சுயதனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். (ஓ,5)

## நாடாளுமன்றை கூட்டுவதா....?

தீர்மானிக்க வேண்டும். எனது விருப்பத்துக்கிணங்க நாடாளுமன்றத்தைக் கூட்ட முடியாது." இவ்வாறு தெரிவித்தார், சபாநாயகர் கரு ஜயசூரிய.
இது பற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது: "கொரோனா வைரஸுக்கு எதிராக முழு உலகமே ஓரணியில் நின்று போராடும் போது, இலங்கை மற்றொரு அரசமைப்பு நெருக்கடியை விரும்பவில்லை. எனவே, நான் ஒருதலைப்பட்சமாக நாடாளுமன்றை மீண்டும் கூட்டுவேன் என்ற வதந்திகள் தவறானவை. ஒரு நெருக்கடியைத் தவிர்க்க அனைத்து முயற்சிகளும் நிறைவேற்று அதிகாரத் தரப்பால் எடுக்கப்பட வேண்டும். ஒரு சர்ச்சை வருமாயின், நீதித்துறையின் முடிவை ஆதரிக்க வேண்டிய கட்டாயத்தில் நான் இருக்கின்றேன்" என்றார். (த-22)

## ஆனையிறவு, பூநகரியில்...

ழைப்பு வழங்க வேண்டும் என்று யாழ்ப்பாண வர்த்தக சங்க உபதலைவர் இ.ஜெயசேகரன் கோரிக்கை விடுத்துள்ளார்.
வர்த்தக சங்கத்தில் இன்று காலை நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது: கொழும்பிலிருந்து 8 பேர் யாழ்ப்பாணத்துக்கு அனுமதி பெறாது வந்துள்ளனர். இவர்கள் பொருள்களை ஏற்றி வரும் லொறியிலேயே வந்துள்ளனர். இதன் காரணமாக யாழ்ப்பாணத்துக்கு பொருள்களை ஏற்றி வரும் வாகனங்கள் சோதனையிடவுள்ளதாகப் படைத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.
ஆனையிறவு மற்றும் பூநகரியில் வாகனங்கள் சோதனைக்கு உட்படுத்தப்படும். வர்த்தகர்கள் அதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று தெரிவித்தார்.
இந்தச் சோதனைக்காக பொருள்கள் இறக்கி ஏற்றுவதனால் ஏற்படும் செலவுகளை வர்த்தகர்கள் ஏற்றுக் கொள்வார்களா? அல்லது பொருள்கள் மீது சுமத்தப்படுமா? என்று ஊடகவியலாளர் ஒருவரால் கேள்வி எழுப்பப்பட்டது.
'பொருள்களை இறக்கி ஏற்றுவதற்கு பெரும் செலவு ஏற்படாது' என்று அவர் பதிலளித்தார். (ஓ,5)

## இன்றும்....

330 இலிருந்து 335 ஆக அதிகரித்துள்ளது.
இவர்களில் இதுவரை 105 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர் என்றும், 7 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும், 223 பேர் 5 மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.
தொற்றுக்குள்ளாகியவர்களில் 94 பேர் கொழும்பு தேசிய தொற்று நோய்த் தடுப்பு மருத்துவமனையிலும், 21 பேர் முல்லேரியா மருத்துவமனையிலும், 37 பேர் வெலிக்கந்தை ஆதார மருத்துவமனையிலும், 18 பேர் சிலாபம் இரணவில மருத்துவமனையிலும், 53 பேர் காத்தான்குடி ஆதார மருத்துவமனையிலும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.
மட்டக்களப்பு புனானை தனிமைப்படுத்தல் நிலையத்திலும், அம்பாறை ஒலுவில் தனிமைப்படுத்தல் நிலையத்திலும் கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்ட மேல் மாகாணத்தைச் சேர்ந்தவர்களே காத்தான் குடி ஆதார மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (த-22)

## வர்த்தகர்களின்....

யாழ்ப்பாணம் வர்த்தக சங்கத்தில் இன்று மதியம் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது: கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 8 பேர் அனுமதி பெறாது இங்கு வந்துள்ளனர். அவர்கள் லொறி ஒன்றில் இங்கே வந்ததாக பாதுகாப்புத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.
கோப்பாயைச் சேர்ந்த ஒருவருக்குச் சொந்தமான லொறியை யாழ்ப்பாண நகர வர்த்தகர் ஒருவரும், வேறு சில வர்த்தகர்களும் வாடகைக்கு அமர்த்தி கொழும்பிலிருந்து பொருள்களைக் கொண்டு வந்துள்ளனர்.
சாரதி புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்தவர். லொறி உரிமையாளருக்குத் தெரியாமலேயே சாரதி, 8 பேரையும் ஏற்றி வந்துள்ளார்;. இது கண்டிக்கத்தக்க விடயம்.
நாம் வர்த்தகர்கள், லொறி உரிமையாளர்களை இன்று காலை அழைத்து அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளோம். அவர்களுக்கு வழங்கப்பட்ட ஊரடங்கு அனுமதிப் பத்திரங்களை தவறாகப் பயன்படுத்த வேண்டாம் என்று அழுத்தமாகத் தெரிவித்துள்ளோம்.
யாழ்ப்பாணத்திலிருந்து மரக்கறிகளை ஏற்றிச் செல்லும் லொறி, கொழும்பிலிருந்து திரும்பி வரும்போது பொருள்களை ஏற்றி வருகின்றது. அவ்வாறு ஏற்றி வரும் போதே, கொழும்பு தனிமைப்படுத்தல் பிரதேசங்களில் வசித்து வந்த இவர்களையும் லொறிச் சாரதி ஏற்றி வந்துள்ளார் என்று தெரிவித்தார். (ஓ,5)

## காப்புறுதிகாரரை...

றுதி நிறுவனம் ஒன்றிலிருந்து காப்புறுதியைப் பெற்றுள்ளார். இதற்காக மாதத் தவணைப் பணம் செலுத்தும் நிலையில் அவரது வீட்டுக்கு நேற்றுக் காலை காப்புறுதி நிறுவனத்தினர் பண அறவீட்டுக்காக வந்தனர்.
இதன்போது தனது கணவருக்கு அதிக இருமலும் காய்ச்சலும் காணப்படுவதால் சிகிச்சைக்குச் சென்றுள்ளார் என்று மனைவி தெரிவித்துள்ளார்.
இதனால் குறித்த காப்புறுதி நிறுவன ஊழியர், கொரோனா அச்சத்தால் திரும்பிச் சென்றார். ஆயினும் பின்னர் குறித்த நபருக்கு இருமலும் காய்ச்சலும் இருப்பதாக மனைவி கூறிய, இந்தத் தகவல் சுகாதாரத் திணைக்களத் திணைக்கள அதிகாரிகளுக்கும் சென்றுவிட்டது. இவ்வாறு ஒருவர் அதிக காய்ச்சல், இருமலுடன் இருப்பதால் அவரைப் பரிசோதிக்க சுகாதாரக் குழு தேடிச் சென்றபோது காப்புறுதி நிறுவனத்திடமிருந்து தப்புவதற்கே இவ்வாறு பொய் சொன்ன விடயம் தெரியவந்தது. அதனையடுத்து அதிகாரிகள் திரும்பிச் சென்றனர். (த-105)

## பந்து இப்போது...

பய ராஜபக்ஷவின் கைகளிலேயே உள்ளது என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூல் தெரிவித்தார்.
ஜூன் 20ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு கடந்த 20ஆம் திகதி தீர்மானித்து வர்த்தமானி வெளியிட்டுள்ளது. ஆனாலும் மார்ச் 2ஆம் திகதி நாடாளுமன்றம் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவினால் கலைக்கப்பட்டிருந்தது.
அரசமைப்புக்கு அமைவாக மூன்று மாத காலத்தினுள் புதிய நாடாளுமன்றம் கூட்டப்பட வேண்டும். அதன் பிரகாரம் ஜூன் 2ஆம் திகதிக்கு முன்னர் புதிய நாடாளுமன்றம் கூட வேண்டும். ஜூன் 20ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தல் என்று அறிவிக்கப்பட்டுள்ளமையால் புதிய நாடாளுமன்றம் ஜூன் 2ஆம் திகதிக்கு முன்னர் கூட முடியாமையால் அரசமைப்பு நெருக்கடி ஏற்படவுள்ளது.
இதற்கு யார் பொறுப்பு என்று, பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூலிடம் வினவியபோதே மேற்கண்டவாறு கூறினார். இந்த நாடாளுமன்றத்தின் ஆயுட் காலம் முடிந்த பின்னரும் தேர்தல் வைக்க முடியாத நிலைமை காணப்பட்டால் என்ன செய்வது என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு, அது தொடர்பிலும் நாடாளுமன்றம்தான் முடிவு செய்ய முடியும். என்ன செய்ய வேண்டும் என்பதையும் அதற்கான சட்டங்களை ஆக்க வேண்டியதையும் நாடாளுமன்றம்தான் செய்ய வேண்டும், என்றார். (ஓ,5,105)

## நாடாளுமன்றம் மீள...

என்று தெரிவித்துள்ள வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் அரசு இதனாலேயே அந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த இழுத்தடித்து வருவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.
யாழ்ப்பாணம் நல்லூரில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது: நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக அரசு பல ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது. எனினும் ஊரடங்குச் சட்டம் இன்று வரை சட்டரீதியாக நடைமுறைப்படுத்தவில்லை. இதற்குக் காரணம் பொது மக்கள் பாதுகாப்புச் சட்டத்தை அரசு இன்று வரை நடைமுறைப்படுத்தப்படவில்லை.
அந்தச் சட்டவரைபு நடைமுறைப்படுத்தினால் கலைக்கப்பட்ட நாடாளுமன்றம் மீண்டும் தானாகவே இயங்கும். ஆகவே இந்த அச்சம் காரணமாகவே கோத்தாபய அரசு அந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த அஞ்சி வருகின்றது.
நாட்டில் கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் தணிவதற்கு முன்பாகவே அரசு பல இடங்களில் ஊரடங்குச் சட்டத்தை பகுதியளவில் தளர்த்தியுள்ளது. இது மிகவும் ஆபத்தான விடயம். ஏனெனில் சுகாதார அமைப்புக்கள், மருத்துவ சங்கங்கள் எச்சரிக்கை விடுத்தும் அரசு அதனைக் கணக்கில் எடுக்காது தேர்தலை நடத்துவதிலேயே குறியாக இருக்கின்றது.
அரசு தான் நினைத்தது போல் தேர்தலை நடத்தியே தீரும். அதில் மாற்றுக் கருத்து இருக்க வாய்ப்பில்லை. எனினும் அந்தத் தேர்தலில் வடக்கு கிழக்கு மலையக மக்களின் பங்களிப்பு எந்தளவுக்கு இருக்கும் என்பதே கேள்விக் குறியாகும், என்றார். (ஓ,5,20)

## வேட்பாளர்களுடன்....

தேர்தல்கள் ஆணைக்குழுவால் வெளியிடப்பட்டுள்ளது. அந்த அறிவித்தலில், தேர்தல் காலப் பகுதிக்குள் மக்களுக்கு அரசால் பகிர்ந்தளிக்கப்படுகின்ற நிவாரணங்கள் வழங்கும் நடவடிக்கைகளில் அனைத்து அமைச்சுக்கள், திணைக்களங்கள், நியதிச் சட்ட சபைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் என்பவற்றின் அலுவலர்கள் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகின்ற எந்தவொரு வேட்பாளரோடும் இணைந்து செயற்படுவது கட்சிகள் அல்லது குழுக்கள் அல்லது வேட்பாளர்கள் ஊக்குவிப்பைத் தூண்டுவதால் அதனைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஓ,5)

# நாடாளுமன்று கூடி எந்தப் பயனுமில்லை

## வரதராஜப் பெருமாள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.23

கலைக்கப்பட்ட நாடாளுமன்றை மீளக் கூட்டுவதில் எந்தப் பிரயோச னமும் இல்லை என்று தெரிவித்துள் ளார் ஜனநாயகக் கட்சியின் செயலா ளர் நாயகம் ஆ.வரதராஜப்பெருமாள்.

அவருடைய இல்லத்தில் நேற்று நடைபெற்ற ஊடகச் செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நாடாளுமன்றமானது கூடும் நிர்வா கம் அல்ல சட்டங்களை உருவாக்கு கின்ற நிறுவனம். நாட்டில் ஏற்பட் டுள்ள தேசிய பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கு மக்கள் தலைவர் கள் சமூகப் பிரதிநிதிகள் பிரதேச அமைப்பினர்கள் ஒருங்கிணைந்து செயற்படவேண்டும்.

அப்போதுதான் நாட்டிலுள்ள தேசிய பொருளாதாரம் மற்றும் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து விடுதலை பெறமுடியும் என்று தெரிவிக்கப்பட் டாலும், அந்த எண்ணத்துக்கு ஏற்றவ கையில் வடக்கு, கிழக்கு மாகாணத் தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஒன்றிணைந்து செயற்படவேண்டும்- என்றார். (த-20)

# வட்டார ரீதியில் உழவர் சந்தை!

## தென்மராட்சி மக்கள் கோரிக்கை

சாவகச்சேரி, ஏப். 23

வட்டார ரீதியில் உழவர் சந்தைகளை ஆரம் பிக்குமாறு தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள் ளனர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவித்ததாவது:

இதுவரை காலமும் உள்ளூராட்சி சபைக ளால் நடத்தப்பட்ட சந்தைகளுக்கு மக்கள் பொருள்களைக் கொள்வனவு செய்யச் சென்றனர். இதனால் உற்பத்தியாளர்களும் சந்தைகளுக்கு தமது உற்பத்திப் பொருள்க ளைக் கொண்டு சென்றனர். அண்மைய ஊரடங்குச் சட்டத்தின் காரணமாக உள்ளூ ராட்சி சபைகளால் வட்டார ரீதியில் மக்க ளின் நலன்கருதி தற்காலிக சந்தைகள் அமைக்கப்பட்டு அவை மக்களிடையே வரவேற்பைப் பெற்றுள்ளன.

தற்காலிக சந்தைகளுக்கு உற்பத்திப் பொருள்களைக் கொண்டு செல்லும் உற்பத் தியாளர்கள் உரிய விலையில் பொருள்க ளைக் கொடுக்க முடியவில்லை. எம்மிடம் குறைந்த விலையில் உற்பத்திப் பொருள்க ளைக் கொள்வனவு செய்யும் வியாபாரிகள், அதிகரித்த விலைக்கு விற்பனை செய்கின்ற னர். இரவு பகலாக கஷ்டங்களுக்கு மத்தி யில் உற்பத்தி செய்யும் பொருள்களை உரிய பயன்பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

வட்டார ரீதியில் தற்காலிக சந்தைகள் திறக்கப்பட்டுள்ளதால் ஒவ்வொரு தற்கா லிக சந்தையிலும் வெவ்வேறு விலைகளில் உற்பத்திப் பொருள்களைக் கொள்வனவு செய்கின்றனர் அத்துடன் தற்போதைய ஊரடங்கால் பலர் வீட்டுத் தோட்டங் களை மேற்கொண்டு சந்தைக்குக் கொண்டு வருகின்றனர். இதனால் எமது உற்பத்திப் பொருள்களுக்கு உரிய விலையைப் பெற முடியவில்லை.

தற்போது ஊரடங்குச் சட்டம் தளர்த்தப் பட்டுள்ள வேளைகளில் உற்பத்தியாளர்கள் தமது உற்பத்திப் பொருள்களை ஓரிடத்தில் வைத்திருந்து வியாபாரிகளுக்கு வழங்க உழவர் சந்தைகளை நிறுவ வேண்டும் என்று கோரிக்கை விடுகின்றோம் - என்றனர். (ப-9)



# கசிப்பு உற்பத்தி இருவர் கைது

கிளிநொச்சி, ஏப்.23

கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புளியம் பொக்கணை ஈச்சமோட்டைப் பகுதியில் இயங்கிய கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகையிடப்பட்டு, சந்தேக நபர்கள் இருவர் கைது செய் யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சி மாவட்ட குற்றத்த டுப்புப் பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்க மைய நேற்று அந்தப் பகுதி முற்றுகையிடப்பட்டது.

820 லீற்றர் கோடா,75 லீற்றர் கசிப்பு மற்றும் கசிப்பு உற் பத்தி உபகரணங்கள் என்பன மீட்கப்பட்டன என்றும், இது தொடர்பில் மேலதிக விசார ணைகள் நடைபெறுகின்றன என்றும் தருமபுரம் பொலி ஸார் தெரிவித்தனர். (ஐ-113)

## யாழ்ப்பாணம் வந்த

# தபால் பொதிகளால் ஊழியர்கள் அச்சம்!

யாழ்ப்பாணம், ஏப்.23

கொழும்பு தபால் நிலையத்தில் இருந்து யாழ்ப்பாணம் தபால் நிலையத்துக்கு தபால் பொதிகள் எடுத்து வரப்பட்டுள்ள நிலை யில் அந்தத் தபால் பொதிக ளால் ஊழியர்களிடையே அச்சம் ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பில் இருந்து நேற்றிரவு ஒரு தொகை தபால் பொதிகள் யாழ்ப்பாணம் தபால் நிலை யத்துக்கு எடுத்து வரப்பட்டன. அந்தப் பொதிகளை மக்களுக்கு விநியோகம் செய்யுமாறு தபால் திணைக்கள அதிகாரி கள் உத்தரவிட்டுள்ளனர்.

“கொண்டு வரப்பட்ட பொதி கள், சுகாதார முறைப்படி கொண்டு வரப்படவில்லை. பொதிகள் அனைத்தும் கொரோனாத் தொற்றுக்குள் ளான ஒருவர் கொண்டு வந்தி ருந்தால், தமக்கும் பாதுகாப் பில்லை” என்று ஊழியர்கள் அச்சம் வெளியிட்டனர்.

150க்கும் மேற்பட்ட ஊழியர் கள் கடமையாற்றும் நிலையில் 20 பேருக்கான முகக்கவசம் மற்றும் கையுறைகள் வழங்கப் பட்டுள்ளன. தபால் திணைக்க ளத்தில், சுகாதாரத்தைப் பேணு வதற்கான எந்த அடிப்படை வசதிகளையும் நிர்வாகம் செய்யவில்லை என்றும் ஊழி யர்கள் தெரிவித்தனர்.

தற்போதுள்ள நிலைமையில், மருந்து வகைகள் தவிர்ந்த ஏனைய பொதிகளை எவ்வாறு மக்களுக்கு விநியோகம் செய்ய முடியும். ஊழியர்களுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்ததன் பின்னர் மக்க ளுக்கான பொதிகளை விநியோ கம் செய்யலாம். கொரோனாத் தொற்றுக்கான அச்சம் மேலும் காணப்படுவதனால், ஒவ் வொரு வீடுகளுக்கும் சென்று, பொதிகளை விநியோகம் செய்யும் போது, அவர்களிடமி ருந்தும், தொற்று ஏற்படுவதற் கான வாய்ப்புக்கள் இருப்பத னால், நிர்வாகம் பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெ டுக்க வேண்டும். கொழும்பில் இருந்து கொண்டு வரப்பட்ட பொதிகளை உரிய சுகாதார முறைகளில் தொற்று நீக்குவ தற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அதேவேளை, அங்கு செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவிய லாளரிடம் தொலைபேசியில் உரையாடிய தபால் அதிகாரி, ஊழியர்களுக்கான அடிப்படை சுகாதார வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. உரிய முறையில் பொதிகள் கொண்டு வரப்பட்டுள்ளன என்று பதில் அளித்தார். ஆனால், ஊழியர் கள் கை கழுவுவதற்கான ஏற்பாடு கள் கூட அங்கு இல்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.(க-106)

# மரக்கறி மொத்தமாக நாராஹென்பிட்டிக்கு

கொழும்பு, ஏப்.23

கொழும்பு புறக்கோட்டை மெனிங் சந்தை மூடப்பட்டிருப்ப தால், மரக்கறிகளை மொத்தமாக நாராஹென்பிட்டி பொருளா தார மத்திய நிலையத்துக்கு அனுப்புவதற்கு உற்பத்தியாளர்க ளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அத்தியாவசியப் பொருள் களை விநியோகிக்கும் நடவடிக்கைகளில் நாராஹென்பிட்டி பொருளாதார மத்திய நிலையம் ஈடுபடுகிறது. மீகொட, இரத்மா லானை, வெலிசர, பிலியந்தலை மற்றும் வெயாங்கொட பொரு ளாதார மத்திய நிலையங்களுக்கும் மரக்கறிகளை அனுப்பி வைக்க முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ப)

# யாழ்.பல்கலையில் தொற்று நீக்கல்

யாழ்ப்பாணம், ஏப்.23

யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் கிருமித் தொற்று நீக்கும் நடவடிக்கை இராணுவத்தினரால் இன்று முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீட பீடாதிபதி ரவிராஜ் முன்னிலையில் இராணுவத்தின் 51 டிவிசனும், 511 பிரிகேட்டும் இணைந்து கிருமித் தொற்று நீக்கம் செய்யும் நடவடிக்கையை முன்னெ டுத்தனர். (ஐ-106,20)



# நாட்டின் வறுமை நிலை 43.9 வீதமாக அதிகரிக்கும்

## உலக வங்கி அறிவிப்பு

கொழும்பு, ஏப்.23

கொரோனா வைரஸ் தொற்றால் இலங்கையின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டு இந்த ஆண்டு இறுதியில் நாட்டின் வறுமை நிலை 43.9 வீதமாக அதிகரிக்கும் என உலக வங்கி அறிவித்துள்ளது.

இந்த ஆண்டு நாட்டின் பொருளாதார வளர்ச்சி வீதமானது 3 வீதமாக குறைவடையும் எனவும் உலக வங்கி மதிப்பிட்டுள்ளது. இதனால் சிறிய மற்றும் மத்திய தர தொழிற்துறையினர் கடும் போராட்டத்தை எதிர்நோக்க நேரிடும் அத்துடன் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக சமூக இடைவெளியை முன்னெடுத்துச் செல்ல எடுக்கப்படும் நடவடிக்கைகள் பொருளாதாரத்தில் நேரடியாகத் தாக்கத்தை ஏற்படுத்தும். சுற்றுலாப் பயணங்களுக்கான வரையறை நீடிக்கப்பட்டுள்ளதால், இலங்கையின் சுற்றுலாத்துறை முற்றாக வீழ்ச்சியடையும் என உலக வங்கி மதிப்பீடு செய்துள்ளது. (ப)

# இணைய வழி கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஏப்.23

சிறகுகள் அமையம் பயில்களம் ஊடாக இணைய வழி மூலமாக "நிலைபேறான உணவுத் தொகுதி கொவிட்19 தருகின்ற பாடம்" எனும் தலைப்பில் இன்று கலந்துரையாடல் நடத்தப்படும்.

ஊரடங்கு காலப்பகுதியில் உணவு வழங்கலில் பெற்றுக் கொண்ட அனுபவங்கள், எதிர்கொண்ட சவால்கள் மற்றும் கற்றுக் கொண்ட பாடங்கள் தொடர்பில் கலந்துரையாடல் இடம்பெறும்.

இன்று வெள்ளிக்கிழமை இரவு 8 மணி தொடக்கம் 9.30 வரையான காலப்பகுதியில் பேராசிரியர் ந.சிறீஸ்கந்தராஜா நெறிப்படுத்தலில் கலந்துரையாடல் இடம்பெறும்.

இணையவழிக் கலந்துரையாடலில் கலந்து கொள்ள ஆர்வமுடையோர் www.sirakukal.online எனும் முகவரியில் பதிவு செய்து கொள்ள முடியும். மேலதிக விவரங்களுக்கு 0764658482 இலக்கத்தைத் தொடர்பு கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (க-222)

# கொள்கலன்களை விடுவிக்க முடிவு!

கொழும்பு, ஏப்.23

கொழும்பு துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அத்தியாவசியப் பொருள்கள் அடங்கிய கொள்கலன்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் இருந்து வரும் பொருள்களை இறக்குமதி செய்வதற்குக் கடந்த ஜனவரி மாதம் 24 ஆம் திகதி முதல் தடைவிதிக்கப்பட்டது. அதன் பின்னர் நாட்டில் இறக்குமதி செய்யப்பட்ட பொருள்கள் அடங்கிய கொள்கலன்கள் துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டன. இந்த கொள்கலன்களில் மஞ்சள் உட்பட பல அத்தியாவசிய பொருள்கள் உள்ள நிலையில், அவற்றைத் தடுத்து வைத்துள்ளமையால், அத்தியாவசியப் பொருள்களின் விலை பல மடங்கு அதிகரித்துள்ளது.

இவ்வாறு துறைமுகத்தில் தேங்கிக் கிடக்கும் 26 ஆயிரம் கொள்கலன்கள் விடுவிக்கப் படவுள்ளன என்று துறைமுக அதிகார சபையின் தலைவர் ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் தயாரத்ன தெரிவித்தார். (ஐ)

# கொவிட் 19 நிதியத்துக்கு 37 மில். ரூபா அன்பளிப்பு

## வைப்பு மீதி 822 மில்லியனாக அதிகரிப்பு

கொழும்பு, ஏப்.23

நிறுவன மற்றும் தனிப்பட்ட அன்பளிப்புகள் மற்றும் நேரடி வைப்புகளுடன் கொவிட் 19 சுகாதார, சமூக பாதுகாப்பு நிதியத்தின் மீதி தற்போது 822 மில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கும், அந்த வைரஸை இல்லாதொழிப்பதற்கும் கொவிட் 19 சுகாதார, சமூக பாதுகாப்பு நிதியம் ஆரம்பிக்கப்பட்டது. இந்த நிதியத்துக்கு உலகின் பல அமைப்புக்கள், நாடுகள், அதிகாரிகள், அமைச்சர்கள், செல்வந்தர்கள், கொடையாளர்கள் எனப் பலரும் தங்களது பங்களிப்புக்களை வழங்கியிருந்தனர்.

தற்போது 37 மில்லியன் ரூபா நிதி மேலும் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி நிறுவன மற்றும் தனிப்பட்ட அன்பளிப்புகள் மற்றும் நேரடி வைப்புகளுடன் கொவிட்19 சுகாதார, சமூக பாதுகாப்பு நிதியத்தின் மீதி தற்போது 822 மில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு செய்தி வெளியிட்டுள்ளது. (ப)

# ரி–56 ரக துப்பாக்கியுடன் ஒருவர் கைது

சம்மாந்துறை, ஏப்.23

சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செந்நெல் கிராமத்தில் ரி56 ரக துப்பாக்கியுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். இரண்டு குழுக்களுக்கிடையில் மது போதையில் இடம்பெற்ற பிரச்சினையின் போது துப்பாக்கிச் சூடு நடத்திய சந்தேக நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

செந்நெல் கிராமத்தில் கடந்த திங்கட்கிழமை சம்பவம் இடம்பெற்றது. அங்கு இரவு 9.30 மணியளவில் துப்பாக்கிச் சூடு ஒன்று இடம்பெற்றதாகப் பொலிஸாருக்குக் கிடைத்த முறைப்பாட்டுக்கமைய கிழக்கு மாகாண சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் நிலந்த ஜெயவர்த்தனவின் கட்டளைக்கமைய சம்மாந்துறை பொலிஸ் நிலைய குற்றப்புலனாய்வுப் பொறுப்பதிகாரி விஜயராஜா குழுவினர் துப்பாக்கிச் சூடு இடம்பெற்று 24 மணித்தியாலங்களுக்குள் 26 வயதுடைய சந்தேகநபரைக் கைது செய்தனர். துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டு மறைத்து வைத்திருந்த ரி56 ரக துப்பாக்கி மற்றும் 9 ரவைகள் அவரிமிருந்து மீட்கப்பட்டது. சம்பவத்தின் போது இரு துப்பாக்கி வேட்டுக்களை சந்தேக நபர் தீர்த்துள்ளார் என்று பொலிஸாரின் விசாரணையில் தெரிய வந்துள்ளது. (ஐ)



# நாடாளுமன்றைக் கூட்டும் அதிகாரம் சபாநாயகருக்கு

## லக்ஷ்மன் கிரியல்ல தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.23

நாடாளுமன்றத்தைக் கூட்டுவதற்கான அதிகாரம் சபாநாயகருக்கு இருக்கின்றது என்று முன்னாள் சபை முதல்வரும், சட்டத்தரணியுமான லக்ஷ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தைக் கலைப்பது தொடர்பில் மார்ச் 2 ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் தற்போது வலுவிழந்துவிட்டது. தற்போது நாடாளுமன்றத்தைக் கூட்டுவதற்கான அதிகாரம் சபாநாயகருக்கு இருக்கின்றது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

அதேவேளை இது தொடர்பில் கருத்து வெளியிட்ட சட்டத்தரணி அஜித் பி. பெரேரா தெரிவித்ததாவது:

நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட தினத்தில் இருந்து மூன்று மாதங்களுக்குள் பொதுத் தேர்தல் நடத்தப்பட்டு, நாடாளுமன்றம் கூட்டப்படவேண்டும். மூன்று மாதங்களுக்குள் தேர்தலை நடத்த முடியாமல் போனால், நாடாளுமன்றத்தைக் கலைப்பது தொடர்பான ஜனாதிபதியின் அறிவித்தல் வலுவற்றதாகிவிடும். அதன்பின்னர் பழைய நிலைமை திரும்ப வேண்டும்.

ஜூன் 2 ஆம் திகதி புதிய நாடாளுமன்றத்தைக் கூட்டும் வகையில் தேர்தலை நடத்த முடியாத சூழ்நிலை இலங்கை அரசுக்குத் தற்போது ஏற்பட்டுள்ளது.

பொதுத்தேர்தல் ஜூன் 20 ஆம் திகதியே நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் அரசமைப்பு நெருக்கடி நிலைமை உருவாகியுள்ளது. அரசமைப்புப் பேரவையும் சபாநாயகர் தலைமையில் இன்று கூடவுள்ளது. இந்த நிலையில் அவர்கள் மேற்கண்டவாறு கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். (ப-44)

# தோட்டங்களில் வசிப்பவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை ஆரம்பம்

கொழும்பு, ஏப்.23

கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையிலும், சமூகத் தொற்று பரவல் குறித்த அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ள நிலையிலும், கொழும்பு மாவட்டத்தில் உள்ள அனைத்துத் தோட்டங்களிலும் உள்ளவர்களைக் கொரோனா வைரஸ் தொற்றைக் கண்டறியும் பி.சி.ஆர். பரிசோதனைகளுக்கு உட்படுத்த சுகாதார அமைச்சுத் தீர்மானித்துள்ளது.

கொழும்பு மாநகர சபையின் பிரதான வைத்திய அதிகாரி உள்ளிட்ட சுகாதார அதிகாரிகளுக்கிடையே இன்று நடைபெற்ற கலந்துரையாடலின் போதே குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டது என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் சிறப்பு வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

அடையாளம் காணப்பட்டுள்ள பண்டாரநாயக்க மாவத்தை பகுதியில், 15 பேர்ச் நிலப்பரப்பில் 200 பேர் வரை வசித்துள்ளனர். அதில் சிகை அலங்கார நிலையம் இருந்துள்ளது. அங்கு வசித்தவர்கள் அந்தப் பகுதித் தோட்டங்களில் உள்ளவர்களுடன் மட்டுமல்லாமல், அதனை அண்டிய பல பகுதிகளில் உள்ளோருடன் தொடர்பில் இருந்துள்ளனர்.

இவ்வாறான பின்னணியில் அதிக மக்கள் குறைந்த இடப்பரப்பில் நெருக்கமாக வாழ்ந்து வந்துள்ள சூழலில் கொரோனா தொற்று பரவுவதற்கான சூழல் அதிகமாகும். எனவே இந்த விடயங்கள் குறித்து அவதானம் செலுத்தி கொழும்பில் எழுமாறாகக் கொரோனா குறித்து பி.சி.ஆர். பரிசோதனைகளை முன்னெடுக்க நாம் தீர்மானித்துள்ளோம்- என்றார். (ப)

# 1988 - 1989க்குப் பின்னர் வருகின்ற ஊரடங்குகால தேர்தல் அறிவிப்பு

கொழும்பு, ஏப். 23

*1988 - 1989 ஆம் ஆண்டு காலப்பகுதிக்குப் பின்னர் ஊரடங்கு நடைமுறையிலுள்ள போது தேர்தலை நடத்துவதற்கான அறிவிப்பு வெளியிடப்படுவது இதுவே முதற் தடவை.*

தேர்தல்கள் ஆணைக்குழு இது விடயத்தில் உரிய சட்டக் கட்டப்பாடுகளையும் பூர்த்தி செய்திருப்பினும், இது தேர்தலை நடத்துவதற்கு உகந்த தருணமல்ல என்று தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலைய தேசிய ஒருங்கிணைப்பாளர் மஞ்சுள கஜநாயக தெரிவித்துள்ளார்.

பொதுத்தேர்தலை நடத்துவதற்கான திகதியை தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ள போதிலும், இது தேர்தலை நடத்துவதற்குப் பொருத்தமான சந்தர்ப்பமல்ல என்றும் தற்போதைய சூழ்நிலையில் தேர்தல்களைக் கண்காணிப்பதற்கான அலுவலர்களும் அவர்களுடைய பணியில் முழுமையாக ஈடுபட முடியாத நிலையே உள்ளது என்றும் மேலும் தெரிவித்தார்.

'பொதுத்தேர்தல் எதிர்வரும் ஜூன் மாதம் 20 ஆம் திகதி நடத்தப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்திருக்கிறது. இந்த நிலையில் அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். (த)

# மூடப்படும் பஸ் நிலையம்

அநுராதபுரம், ஏப்.23

இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான அநுராதபுரம் பஸ் நிலையத்தைத் தற்காலிகமாக மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்றுக்குள்ளான நிலையில் கடற்படையில் பணியாற்றும் பெண்ணொருவர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளார். அவரது அயல் வீட்டு நபரொருவர், நிலையத்தில் பணியாற்றுவதன் காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-114)

# தொழிற்சாலைப் பணிகளை மீண்டும் ஆரம்பிக்க திட்டம்

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.23

நாடு முழுவதுமுள்ள 217 சுதந்திர வர்த்தக வலயங்களில் உள்ள தொழிற்சாலைகளின் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தொழில்துறை ஏற்றுமதி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

அரசு பரிந்துரைத்துள்ள சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி தொழிற்சாலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 217 தொழிற்சாலைகளில் 30 ஆயிரத்து 269 ஊழியர்கள் தற்போது பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் 48 தொழிற்சாலைகள் மற்றும் பியகம சுதந்திர வர்த்தக வலயத்தில் 35 தொழிற்சாலைகள் திறக்கப்பட்டுள்ளன. இந்த தொழில்ப் பேட்டைகள் அனைத்தும் பொதுச் சுகாதார அதிகாரிகளால் தினமும் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றது. (ப)

# கொரோனாவுக்கு சுவை தெரியாது!

கொழும்பு, ஏப்.23

கொவிட் 19 வைரஸால் பாதிக்கப்படுவோருக்கு சுவை மற்றும் வாசனையை நுகர முடியாத அறிகுறிகள் தென்படும் என ஆராய்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்து ஆராய்ச்சியாளர்கள் சிலர் 200க்கும் அதிகமான கொவிட் 19 தொற்றாளர்களிடம் மேற்கொண்ட ஆய்வில் இந்தத் தகவல் கண்டறியப்பட்டுள்ளது.

கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட 67 சதவீதமானோர் சுவை மற்றும் வாசனையை நுகர முடியாதவர்களாக இருந்தனர் என்று ஆய்வில் தெரியவந்துள்ளது. இதற்கு முன்னர் லண்டனில் நடத்தப்பட்ட ஆராய்ச்சியிலும் இந்தத் தகவல் தெரியவந்திருந்தது. (க)

# சுழிபுரம் கடலில் "சுறா" வேட்டை

## *150 கிலோ சுறா சிக்கியது*

யாழ்ப்பாணம், ஏப்.23

யாழ்ப்பாணம் சுழிபுரம் கடலில் 150 கிலோ எடைகொண்ட சுறா, நேற்று இரவு மீனவரின் வலையில் சிக்கியுள்ளது.

சுழிபுரத்தைச் சேர்ந்த நீலவண்ணன் என்ற மீனவரின் வலையிலேயே அந்தச் சுறா கிக்கியது. சிக்கிய சுறா மீனவரின் சகோதரர்களின் உதவியுடன் கரைக்குக் கொண்டுவரப்பட்டது வாடியில் வைத்து கிலோ 350 ரூபா வீதம் அது விற்பனை செய்யப்பட்டது. (ப-114)



# நாடாளுமன்றம் கூட்டப்படாவிடின் உயர் நீதிமன்றத்தை நாடமுடியும்

## அரசமைப்பு நிபுணர் தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.23

நாடாளுமன்றம் மீண்டும் கூட்டப்படவேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் அதற்கு எதிராக உயர்நீதிமன்றத்தை நாடமுடியும் என்று அரசமைப்பு நிபுணரும், சட்டத்தரணியுமான லால் விஜேநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மூன்று மாதங்களுக்குள் புதிய நாடாளுமன்றத்தை நிறுவவேண்டும் என்ற அடிப்படையிலேயே



நான்கரை வருடங்களில் நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளது. மூன்று மாதங்களுக்குள் தேர்தலை நடத்தி, புதிய நாடாளுமன்ற அமர்வை நடத்தமுடியாமல் போனால், ஜனாதிபதியால் விடுக்கப்பட்ட அறிவிப்புத் தானாகவே வலுவற்றதாகிவிடும். அப்படியானால் எட்டாவது நாடாளுமன்றத்தின் நடவடிக்கை மீண்டும் ஆரம்பமாகும். ஏனெனில் கலைக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத்துக்கு செப்டம்பர் 2 ஆம் திகதி வரை ஆயுட்காலம் உள்ளது. ஆகவே, நாடாளுமன்றம் கூட்டப்படாவிட்டால் அதற்கு எதிராக உயர்நீதிமன்றத்துக்குச் செல்லமுடியும்- என்றார். (ப)

# 12 மணித்தியாலங்கள் வரை விமானங்கள் தரிக்கமுடியும்

## உள்வருவதற்கே தடை

கொழும்பு, ஏப். 23

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாகப் பயணிக்கக்கூடிய எந்தவொரு பயணிகள் விமானமும் விமான நிலையத்தில் தரித்து நிற்பதற்கான கால அளவு 12 மணித்தியாலங்களாக உயர்த்தப்பட்டுள்ளது.

கொவிட் 19 கொரோனா வைரஸ் பரவல் அச்சுறுத்தல் காரணமாக வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்குப் பயணிகள் வருவதற்கான அனைத்து விமானசேவைகளும் இடைநிறுத்தப்பட்டன. எனினும், எந்தவொரு நாட்டிலிருந்து பிறிதொரு நாட்டுக்குப் பயணிக்கும் விமானம் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தற்காலிகமாகத் தரித்துச் செல்வதற்கு மாத்திரம் அனுமதிக்கப்பட்டது.

அத்தகைய விமானங்கள் இலங்கையில் தரித்து நிற்பதற்கான கால அளவு தற்போது 12 மணித்தியாலங்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது என்று விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் நிறுவனம் அறிவித்திருக்கிறது. (த)

## ஊரடங்கு நடைமுறையால்

# போக்குவரத்துத் துறைக்கு ரூ. 3,000 மில்லியன் இழப்பு

கொழும்பு, ஏப்.23

கடந்த ஒரு மாதமாக நாடுமுழுவதும் நடைமுறையில் உள்ள ஊரடங்குச் சட்டத்தால் போக்குவரத்து துறைகளுக்கு 3 ஆயிரம் மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான இழப்பு ஏற்பட்டுள்ளது.

கொரோனா வைரஸின் பாதிப்பு இலங்கையிலும் பரவ ஆரம்பித்ததைத் தொடர்ந்து, நாடு முழுவதும் ஊரடங்குச் சட்டம் உடனடியாக நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. இதனால் போக்குவரத்துத் துறைகள் அனைத்தும் முடங்கியிருந்தன. இவ்வாறு போக்குவரத்துக்கள் முடக்கப்பட்டதாலேயே இந்த நிதி இழப்பு ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. ரயில் திணைக்களம், இலங்கை போக்குவரத்துச் சபை, மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் என்பனவற்றுக்கே இந்த இழப்பு ஏற்பட்டுள்ளது. மேற்படி மூன்று அரச நிறுவனங்களுக்கும் கடந்த ஒரு மாதத்தில் 3 ஆயிரத்து 348 மில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது எனத் தகவல் வெளியாகியுள்ளது. (ப)

# தட்டுப்பாடு ஏற்படாது பதற்றம் வேண்டாம்!

## உணவுத் திணைக்கள நாயகம் தெரிவிப்பு

கொழும்பு, ஏப்.23

அரிசி, சீனி, பருப்பு, ரின் மீன் உட்பட அத்தியாவசியப் பொருள்கள் போதியளவு கையிருப்பில் இருப்பதால், அவற்றுக்குத் தட்டுப்பாடு ஏற்படாது. எனவே பொது மக்கள் பதற்றமடையத் தேவையில்லை என்று உணவு திணைக்கள ஆணையாளர் நாயகம் ஜே.கிருஷ்ணமூர்த்தி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

கையிருப்பில் உள்ள அரிசி, மா, பருப்பு, சீனி, ரின்மீன் போன்ற அத்தியாவசியப் பொருள்கள் கூட்டுறவு மற்றும் விற்பனை நிலையங்கள் ஊடாகப் பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. கிழங்கு, வெங்காயம், வெள்ளைப்பூண்டு போன்ற அத்தியாவசியப் பொருள்களும் சந்தையில் தாராளமாகக் கிடைக்கக் கூடியதாக உள்ளது. இதற்குத் தட்டுப்பாடு ஏற்படும் பட்சத்தில் வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்கள் ஊடாக இறக்குமதி செய்யப்படும்- என்றார். (ஐ)

# 'கொவிட்19' ஒழிப்பு செயற்பாடுகளுக்கு 2 பஸ்கள் அன்பளிப்பு



கொழும்பு, ஏப்.23

கொவிட்19 வைரஸ் ஒழிப்புச் செயற்பாடுகளுக்குப் பயன்படுத்துவதற்கென டொயொடா லங்கா தனியார் நிறுவனம் 20 மில்லியன் பெறுமதியான இரண்டு பஸ்களை அன்பளிப்புச் செய்துள்ளது.

ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து நேற்றுமுன்தினம் டொயொடா லங்கா தனியார் நிறுவனத்தின் முகாமைத்துவ சபை உறுப்பினர்களால் ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ. ஜயசுந்தர மற்றும் ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க ஆகியோரிடம் கையளிக்கப்பட்டன. (ஐ)



# நாடாளுமன்றைக் கூட்டும் அவசியம் தற்போதில்லை

## சுசில் பிரேமஜயந்த தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 23

கலைக்கப்பட்ட நாடாளுமன்றை மீண்டும் கூட்டுவதற்கு எவ்வித அவசியமும் அரசுக்குக் கிடையாது. அரசமைப்பைத் தொடர்புபடுத்தி எதிர்த் தரப்பினர் சட்டச் சிக்கலைத் தோற்றுவிக்க முயற்சிக்கின்றார்கள். எத்தகைய சட்டச் சிக்கல் ஏற்பட்டாலும் நீதிமன்றம் ஊடாகத் தீர்வுகாணத் தயார் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கலைக்கப்பட்ட நாடாளுமன்றை மீண்டும் கூட்ட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்து கொண்டு அரசியல் ரீதியான கருத்துக்களைக் குறிப்பிடுகின்றார்கள்.

ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைத்து வெளியிட்ட வர்த்தமானி செல்லுபடியற்றது என்று குறிப்பிட்டு அரசமைப்பு ரீதியான நெருக்கடிகளை ஏற்படுத்த முயற்சிக்கின்றார்கள்.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதில் மாத்திரம் கவனம் செலுத்தினால் பிறகு மாறுபட்ட பிரச்சினைகள் தோற்றம் பெறும். பலமான அரசு தோற்றம் பெற்றால் மாத்திரமே நாட்டை முன்னேற்றகரமான முறையில் முன்னெடுத்துச் செல்ல முடியும். பொதுத்தேர்தலைத் தொடர்ந்து பிற்போடுவதில் எதிர்த் தரப்பினர் கவனம் செலுத்துகிறார்கள்.

தோன்றியுள்ள நெருக்கடிகளுக்குத் தீர்வு காண எதிர்த்தரப்பினர் நீதிமன்றை நாடினால் அதனையும் வெற்றிகொள்ளத் தயாராகவே உள்ளோம் - என்றார். (த)

# வீட்டில் முடங்கியுள்ள மக்களுக்கு வீட்டில் தங்கும் கதை அறிமுகம்

கொழும்பு, ஏப்.23

கொரோனா பாதிப்பால் தங்களுடைய வீடுகளில் முடங்கியிருக்கும், மக்களின் ஆக்கங்களை வெளிப்படுத்தும் வகையில், "வீட்டில் தங்கும் கதை" எனும் போட்டி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. சர்வோதயா, ப்யூஷன், ஐ.சி.டி.ஏ மற்றும் பேஸ்புக்கின் பங்களிப்புடன் இந்தப் போட்டி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக ஐ.சி.டி.ஏ நிறுவனம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

சர்வோதயா ப்யூஷன் ஆனது இந்த முடக்கப்பட்ட காலகட்டத்தில் அனைத்து சமூகத்தினரும் தங்கள் வயதைப் பொருட்படுத்தாமல் படைப்பாற்றல் மற்றும் உற்பத்தித் திறன் கொண்டவர்களாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்துடன், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனம் (ஐ.சி.டி.ஏ) மற்றும் பேஸ்புக் உடன் இணைந்து 'வீட்டில் தங்கும் கதை' போட்டியைத் தங்கள் பேஸ்புக் மற்றும் இன்ஸ்டாகிராம் பக்கங்களில் 2020 ஏப்ரல் 12 ஆம் தேதி ஆரம்பித்துள்ளது.


சமூக ஊடகப் பயனாளிகள் படைப்பாற்றல் முறையில் நீங்கள் வீட்டில் தங்கியிருக்கும் கதையை ஹேஸ்டேக் வீட்டில் தங்கும் கதை ஊடாகப் பகிர்வதன் மூலம் இந்தப் போட்டியில் உள்நுழைய முடியும். தனிநபர்கள் அல்லது குடும்ப உறுப்பினர்கள் ஆகியோர் ஓவியங்கள், குறுகிய காணொளிகள், கேலிச் சித்திரங்கள், புகைப்படங்கள் மற்றும் அனிமேஷன்கள் போன்ற ஒரு ஊடகத்தைத் தேர்ந்தெடுக்கலாம், அத்துடன் தங்கள் உள்ளீடுகளை பேஸ்புக் மற்றும் இன்ஸ்டாகிராம் தளங்களைப் பயன்படுத்தி 2020 மே மாதம் 15 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக வீட்டில் தங்கும் கதை எனும் ஹேஷ்டேக்குடன் தங்கள் சொந்தக் காலவரிசையில் இடுகையிடலாம். உள்ளீடுகளானது ஓவியம், காணொலி மற்றும் புகைப்படம் ஆகிய பிரிவுகளில் குழுக்களாக்கப்படும். போட்டியில் நுழைந்த அனைவருக்கும் டேட்டா பேக் வெகுமதி வழங்கப்படும். ஒவ்வொரு குழுவின் இறுதி வெற்றியாளர்களுக்கும் பணப் பரிசுகள் மற்றும் பெறுமதிமிக்க பரிசுகள் வழங்கப்படும் - என்றுள்ளது. (ப)

# இந்தியாவில் கொரோனா 21,393 ஆக உயர்வு



இந்தியாவில் கொரோனா தொற்றுக்குப் பலியானோர் எண்ணிக்கை 681 ஆக அதிகரித்துள்ளது. இதேவேளை 4,258 பேர் குணமடைந்தும், 16,454 பேர் தொடர் சிகிச்சையிலும் உள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இந்தியாவில் கொரோனா பாதிப்பு எண்ணிக்கை 21,393 ஆக உயர்வடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அலுவலக ஊழியர்களுக்கு கொரோனா ஆப்கான் ஜனாதிபதி சுயதனிமைப்படுத்தல்



ஆப்கானிஸ்தானில் ஜனாதிபதி மாளிகையில் பணியாற்றும் ஊழியர்களுக்கு நடத்தப்பட்ட கொரோனா பரிசோதனையில் சுமார் 20 ஊழியர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. ஊழியர்களுக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டதையடுத்து ஜனாதிபதி அஷ்ரப் கனி தன்னைத்தானே தனிமைப்படுத்திக் கொண்டிருப்பதாகத் தகவல் வெளியாகி உள்ளது. ஆனால், ஜனாதிபதியின் உடல்நிலை குறித்து அதிகாரப்பூர்வமாக எந்தத் தகவலும் வெளியிடப்படவில்லை. ஆப்கானிஸ்தானில் இதுவரை 1026 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. 36 பேர் உயிரிழந்துள்ளனர். கொரோனாவால் அதிகம் பாதிக்கப்பட்ட ஈரானில் இருந்து மார்ச் மாதம் 1.5 இலட்சம் ஆப்கானிஸ்தானியர்கள் நாடு திரும்பிய பின்னர், வைரஸ் வேகமாகப் பரவியிருக்கலாம் என அஞ்சப்படுகிறது. இதேபோல் பாகிஸ்தானில் இருந்தும் ஆயிரக்கணக்கானோர் நாடு திரும்பியது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, 40 பேருக்கு தொற்று ஏற்பட்டிருப்பதாக நியூயோர்க் டைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# கொரோனா வைரஸ் நீண்ட நாட்கள் நம்முடன் இருக்கும்

## உலக சுகாதார அமைப்பு

கொரோனா வைரஸ் நீண்ட காலத்துக்கு இந்த கிரகத்தில் இருக்கும். பெரும்பாலான நாடுகள் இன்னும் தொற்றுநோயைக் கையாள்வதற்கான ஆரம்ப கட்டத்திலேயே உள்ளன என்று உலக சுகாதார அமைப்பு எச்சரித்து உள்ளது.

இது தொடர்பாக உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் செய்தியாளர்களுக்குக் கூறியதாவது:

புதிய கொரோனா வைரஸைக் கட்டுக்குள் வைத்திருப்பதாக நினைத்த சில நாடுகள் மீண்டும் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு உள்ளன. அதே நேரத்தில் ஆபிரிக்காவிலும், அமெரிக்காவிலும் சிக்கலான போக்குகள் உள்ளன. பாதிப்புகள் குறைவாக இருந்தாலும், மத்திய ஆபிரிக்கா, தென் அமெரிக்கா மற்றும் கிழக்கு ஐரோப்பாவில் பாதிப்புகள் அதிகரித்து வருவதையே பார்க்கின்றோம்.

எந்தத் தவறும் செய்யாதீர்கள் நாம் நீண்ட தூரம் செல்ல வேண்டியிருக்கிறது. இந்த வைரஸ் நீண்ட நாட்கள் நம்முடன் இருக்கும். கொரோனா வைரஸ் தொற்றை ஜனவரி 30 அன்று நாங்கள் சரியான நேரத்தில் அறிவித்தோம். உலகம் பதிலளிக்க போதுமான நேரம் உள்ளது என்று தெரிவித்தார்.



## கொரோனா நெருக்கடியில்

# பருவநிலை நெருக்கடியை மறந்துவிட்டோம்

## கிரேட்டா துன்பெர்க்

கொரோனாத் தொற்று மற்றும் பருவநிலை நெருக்கடி ஆகிய இரண்டிலும் மக்கள் கவனம் செலுத்த வேண்டும் என்று காலநிலைச் செயற்பாட்டாளர் கிரேட்டா துன்பெர்க் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தற்போது கொரோனா பரவல் தீவிரமடைந்துள்ள நிலையில் உலகம் அதை எதிர்கொள்ளும் முயற்சியில் மட்டும் கவனம் செலுத்தி வருகிறது. இதில் பருவநிலை நெருக்கடியை மறந்துவிட்டது. தற்போதைய சூழலில் கொரோனாவையும் பருவநிலை நெருக்கடியையும் ஒன்றாகக் கையாள வேண்டும் என்று கிரேட்டா தெரிவித்தார்.

சுற்றுச்சூழல் பாதுகாப்பை மையமாகக் கொண்டு 1970ம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 22 அன்று சர்வதேச புவி தினம் கொண்டாடப்படுகிறது. நேற்று ஐம்பதாவது ஆண்டு சர்வதேச புவி தினம் கொண்டாடப்பட்ட நிலையில், அது தொடர்பான காணொலி நிகழ்வில் கலந்துகொண்ட போதே கிரேட்டா இதனைத் தெரிவித்தார்.




# அமெரிக்காவில் 2ஆவது கொரோனா அலை

## மருத்துவ நிபுணர்கள் எச்சரிக்கை

வாஷிங்டன் ஏப்,23

அமெரிக்காவில் கொரோனாவின் இரண்டாவது அலை தற்போதைய நிலையை விட மோசமாக இருக்கும் என மருத்துவ நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

அமெரிக்காவில் வரவிருக்கும் குளிர்காலத்தில் ஏற்படும் கொரோனா வைரஸ் தாக்குதல், தற்போதைய சூழலைவிட மிகவும் வீரியத்துடன் இருக்கும் என்று நோய்க் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையங்களின் தலைவர் ராபர்ட் ரெட்ஃபீல்ட் தெரிவித்துள்ளார். அமெரிக்காவில் ஊரடங்கு உத்தரவைத் தளர்த்த கோரி நடைபெற்றுவரும் போராட்டங்களைத் தொடர்ந்து பல மாகாணங்களில் கட்டுப்பாட்டைத் தளர்த்தத் திட்டமிட்டுள்ளனர்.

இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் மருத்துவ நிபுணர்கள், வரவிருக்கும் மாதங்களில் அமெரிக்காவில் கொரோனாவின் இரண்டாம் அலை வீச வாய்ப்பிருப்பதால் தனிமனித இடைவெளியைத் தொடருவது அவசியம் என்றும் வலியுறுத்தியுள்ளனர்.

# குணமடைந்தோருக்கு மீண்டும் தொற்று

## அதிர்ச்சியில் சீனா!



சீனா, ஏப். 23

சீனாவில் கொரோனாவிலிருந்து குணமடைந்த நபர்களுக்கு 60, 70 நாட்கள் கழித்து மீண்டும் கொரோனா தொற்று ஏற்படுவதாக அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது. சீனாவில் கொரோனாவிலிருந்து குணமாகி வீடு திரும்பிய நபர்களுக்கு பல நாட்களாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில், கொரோனா இல்லை என முடிவுகள் வந்தன. இந்நிலையில், குணமடைந்தவர்களுக்கு சுமார் 60, 70 நாட்கள் கழித்து பரிசோதனை செய்யப்பட்டதில் பலருக்கு கொரோனா இருப்பதாக முடிவுகள் வந்தன.



அதில் பலருக்கு எந்தவித அறிகுறியும் இல்லை என்பது கூடுதல் அதிர்ச்சி. இதனால், மருத்துவர்களும், வல்லுநர்களும் குழப்பத்தில் ஆழ்ந்துள்ளனர்.



# உதவிக்கு வர வேண்டும் ரென்னிஸ் உலகம்

### ஜோகோவிக் அழைப்பு



சர்வதேச ரென்னிஸ் தரவரிசையில் மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள வீர, வீராங்கனைகளுக்கு உதவுவதற்கு ரென்னிஸ் உலகம் முன்வர வேண்டும் என டென்னிஸ் நட்சத்திரமான நொவாக் ஜோகோவிக் வலியுறுத்தியுள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்று ஒரே நேரத்தில் உலகம் முழுவதையும் முடக்கிப் போட்டுள்ளது. அதனால் விளையாட்டுப் போட்டிகள் அனைத்தும் நடைபெறாமல் உள்ளன. ஆகவே, வீர, வீராங்கனைகள் உள்ளிட்ட விளையாட்டுப் போட்டிகளில் சம்பந்தப்பட்டவர்கள் என பலரும் வீட்டுக்குள்ளே முடங்கியுள்ளனர். ரென்னிஸ் போட்டியைப் பொறுத்தவரைக்கும் ஒவ்வொரு தொடரிலும் வெற்றி பெற்று சம்பியன் பட்டம் வெல்லும் வீரர்கள், வீராங்கனைகளுக்குக் கோடிக்கணக்கில் வருமானம் கிடைக்கும். அதேவேளையில் மிகவும் பின்தங்கிய தரவரிசையில் இருக்கும் வீர, வீராங்கனைகளுக்குப் பெரியளவில் வருமானம் கிடைக்காது. இந்த இக்கட்டான சூழ்நிலையில் அவர்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

ஆண்களுக்கான விளையாட்டுக்களை ஏ.டி.பி.டு வரும், பெண்களுக்கான போட்டிகளை டபிள்யூ.டி.ஏ.யும் நடத்துகின்றன. அத்துடன், நான்கு கிராண்ட் ஸ்லாம் போட்டிகளும் அந்தந்த அமைப்பாளர்கள் மூலம் நடத்தப்பட்டு வருகின்றன. இவர்கள் வீர, வீராங்கனைகளுக்கு நிதி வழங்கி உதவ முன்வர வேண்டும் என சேர்பியாவின் நொவாக் ஜோகோவிக் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஜோகோவிச் தெரிவித்துள்ளதாவது

நிதி நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் வீர, வீராங்கனைகளுக்கு உதவி செய்யக்கூடியதும் விழிப்புணர்வை ஏற்படுத்தக்கூடியதுமான ஒரு முன்னணி வீரர் என்ற அந்தஸ்தை நான் பெற்றுள்ளேன். தனிப்பட்ட முறையில் ரென்னிஸ் நடைபெறாவிட்டாலும் பல ஆண்டுகளுக்கு வாழக்கூடிய அளவுக்கு என்னிடம் போதுமான பணம் உள்ளது.

வீரர்கள் தனிப்பட்ட முறையில் அவர்கள் எவ்வளவு விரும்புகிறார்களோ, அதை வழங்க முடியும். வீரர்கள் எந்தத் தரவரிசையில் இருந்தாலும் பணம் கொடுங்கள் என்று கூறுவது கடினம். மாறுபட்ட கருத்துக்களை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. ரென்னிஸ் போட்டியை விரும்பும் எல்லோரையும் டென்னிஸ் போட்டியை காப்பாற்றுவதற்காக நிதி அளிக்க வேண்டும் என அழைக்கிறேன். வீர, வீராங்கனைகளின் ஒற்றுமையை வெளிப்படுத்த வேண்டும் என்று நான் நினைக்கிறேன்.- என்றார்.

# கொலை செய்திருப்பேன்

### அக்தர் ஆவேசம்



ஆட்ட நிர்ணயம் குறித்து வஸீம் அக்ரம் என்னிடம் பேசியிருந்தால், கொலை கூடச் செய்திருப்பேன் என்று பாகிஸ்தானின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளரான சொய் அக்தர் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்துக்கு எதிராக லண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியின்போது பாகிஸ்தானின் அப்போதைய அணித்தலைவரான சல்மான் பட், வேகப்பந்து வீச்சாளர்களான மொஹமட் அமீர், மொஹமட் ஆசிப் ஆகியோர் ஆட்ட நிர்ணயத்தில் ஈடுபட்டிருந்தமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) விசாரணை நடத்தி சல்மான் பட்டுக்கு 10 ஆண்டுகளும், மொஹமட் ஆசீப்புக்கு 7 ஆண்டுகளும், மொஹமட் அமீருக்கு 5 ஆண்டுகளும் தடைவிதித்தது.

எனினும், மொஹமட் அமீரின் 5 ஆண்டுகள் நிறைவடைய சில மாதங்கள் இருந்த நிலையில் அவரை சர்வதேச கிரிக்கெட்டில் விளையாட ஐ.சி.சி. அவருக்கு அனுமதி வழங்கியது.

இந்த நிலையில் பாகிஸ்தான் அணியின் அதிவேகப் பந்து வீச்சாளரான சொய்ப் அக்தர் 1997 முதல் 2011 வரை பாகிஸ்தான் அணிக்காக விளையாடியிருந்தார்.

இவர் நீண்ட காலம் வஸீம் அக்ரம் தலைமையின் கீழ்தான் விளையாடியுள்ளார். அந்தக் காலக்கட்டத்தில் வஸீம் அக்ரம் ஆட்ட நிர்ணயம் குறித்து என்னிடம் அணுகியிருந்தால் அவரை துவம்சம் செய்திருப்பேன் என்று தெரிவித்துள்ளார்.

இது குறித்து அக்தர் தெரிவித்துள்ளதாவது

1990 களில் நான் சில போட்டிகளைப் பார்த்துள்ளேன். அதில் பாகிஸ்தான் அணியால் வெற்றிபெற முடியாத போட்டிகளையும்கூட வஸிம் அக்ரம் தனது அற்புதமான பந்து வீச்சால் வெற்றி பெறச் செய்துள்ளார். ஒருவேளை வஸிம் அக்ரம் ஆட்ட நிர்ணயத்தில் ஈடுபடுமாறு என்னிடம் கூறியிருந்தால், அவரைத் துவம்சம் செய்திருப்பேன். அல்லது கொலைகூடச் செய்திருப்பேன். ஆனால் அவர் என்னிடம் ஒருபோதும் அதுகுறித்து பேசியது கிடையாது. இதை நான் எப்போதும் தெளிவாகக் கூறுவேன்.

நான் அவருடன் ஏழு முதல் எட்டு வருடங்கள் விளையாடியிருப்பேன். கடைநிலை வீரர்களின் விக்கெட்டுக்களை வீழ்த்த என்னிடம் விட்டபோதிலும், முன்வரிசைத் துடுப்பாட்ட வீரர்களின் விக்கெட்டுகளை வீழ்த்தும் பொறுப்பிலும் என்னைச் சேர்த்துக் கொண்டார். அவருக்கு விக்கெட் வீழ்த்தும் வாய்ப்புகள் இருந்தாலும் கூட என்னுடைய முதன்மைப் பந்து வீச்சைக் கருத்தில் கொண்டு பந்து வீச என்னை அனுமதித்தார் - என்றார்.

# தேர்தல் திகதியை....

ஆணைக்குழுவின் தவிசாளர் உள்ளிட்ட மூன்று உறுப்பினர்களும் இணைந்துதான் எடுத்தோம். இந்தத் திகதியில் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய மாற்றத்தை ஏற்படுத்த முடியாது. இவ்வாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினரான பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூல் தெரிவித்தார். ஜூன் 20ஆம் திகதி தேர்தல் இடம்பெறுமா இல்லையா என்பதை மே முதல் வாரத்திலேயே தீர்மானிக்க முடியும்" என்று குறிப்பிட்டிருந்தார். தேர்தல் நடத்துவது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் மூன்று உறுப்பினர்களும் இணைந்துதான் ஜூன் 20ஆம் திகதியைத் தீர்மானித்தோம். தேர்தல் திகதியை தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய தனித்து மாற்ற முடியாது. ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் மூன்று பேரும் இணைந்தே அதில் மாற்றங்களைச் செய்ய முடியும்' இவ்வாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூல் குறிப்பிட்டார். (ஒ,5,105)

# கொழும்பால் கொண்டு....

மாக இருக்கவேண்டும். இவ்வாறு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இன்று மதியம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொழும்பில் தனிமைப்படுத்தப்பட்ட வாழைத்தோட்டம் பகுதியில் இருந்து ஆயிரத்து நூற்றுக்கு மேற்பட்டோர் வடக்கில் உள்ள தனிமைப்படுத்தல் மையங்களுக்கு அழைத்து வரப்பட்டுள்ளார்கள். இவர்கள் தொடர்பில் பொதுமக்கள் அதிகளவில் பதற்றமடையத் தேவையில்லை. ஆனாலும் அவதானமாக இருக்கவேண்டும். இலங்கையிலும் ஏனைய நாடுகளிலும் கொரோனா தொற்றுப் பரவல் கூடிக்கொண்டு செல்கின்றது. இதனால் நாங்கள் தொற்றுக்குள்ளானவர்களை விரைவாகக் கண்டுபிடித்து அவர்களுக்கு சிகிச்சையளிப்பதோடு தொற்றுடையவர்களுடன் தொடர்பைப் பேணியவர்களையும் கண்டறிந்து தனிமைப்படுத்தவேண்டும். கொரோனா தொற்றுப் பற்றி நாங்கள் அதிகளவு கரிசனை கொள்வதோடு, தொற்றைப் பரவலடையச் செய்யாமல் இருப்பதற்கான உதவிகளைச் செய்யவேண்டும். அதேவேளை, தொற்றுப் பற்றி அதிகளவு பதற்றம் இல்லாமல் கட்டுப்படுத்த உதவவேண்டும்- என்றார். (ஒ,5)

# நான்கு நாள்களில் 7 இலட்சம் ரூபா

கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிதி உதவி செய்வதற்காக வித்தியாசமான முறையைக் கையாண்ட, இந்திய மகளிர் ஹொக்கி அணியினர் முதல் நான்கு நாள்களில் இந்திய மதிப்பில் 7 இலட்சம் ரூபா நிதி திரட்டினர். கொரோனா காரணமாக இந்தியா முழுவதும் ஊரடங்கு அமுலில் இருப்பதால் ஏழை கூலித் தொழிலாளர்களின் குடும்பங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. ஏழைத் தொழிலாளர்களின் குடும்பத்துக்குத் தேவையான உணவு உள்ளிட்ட அடிப்படை வசதிகளை செய்து கொடுக்க நிதி திரட்டுவதற்காக இந்திய மகளிர் ஹொக்கி அணியினர் 'ஒன்லைன்' மூலம் உடற் தகுதி சவால் போட்டியை நடத்தி வருகின்றனர். இதன்படி வீராங்கனைகள் அளிக்கும் உடல் தகுதிச் சவாலை ஏற்று செய்யப்படும் ரசிகர்கள் நன்கொடை வழங்க வேண்டும். 18 நாட்கள் நடத்தப்படும் இந்தச் சவால் நிகழ்ச்சியில் முதல் 4 நாட்களில் மாத்திரம் 7 இலட்சம் ரூபா திரட்டப்பட்டுள்ளது. இது குறித்து இந்திய மகளிர் ஹொக்கி அணியின் வீராங்கனை சுஷிலா சானு தெரிவித்துள்ளதாவது:

கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவுவதற்காக நாங்கள் உடற் தகுதிச் சவால் மூலம் நிதி திரட்டி வருவதற்கு மக்கள் அளித்து வரும் ஆதரவு மகிழ்ச்சியளிக்கிறது. தற்போது ஹொக்கி பயிற்சியில் ஈடுபடத் தடை விதிக்கப்பட்டிருப்பதால், முந்தைய காலங்களில் நாங்கள் விளையாடிய போட்டி மற்றும் எதிரணியினர் விளையாடிய போட்டிகளிலெடுக்கப்பட்ட வீடியோ காட்சிகளைப் பார்த்து ஆட்டத்தை ஆய்வு செய்து வருகிறோம். மேலும், எம்மாலான உதவிகளைத் தொடர்ந்து செய்வோம்- என்றார்.

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 23.04.2020 ஆம் திகதி வெளியிடப்பெற்றது.